# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 118 /2022**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் தேதி திங்கட் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அர்ஜுனன் | தொழில் | : கூலி |
| தந்தை பெயர் | : அண்ணாமலை | சமயம் | : |
| கிராமம் | : பெருவளூர் | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 42 |

தேதி 11.09.2023

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C. - 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் )**

**முதல் விசாரணை**

**1.** நான் பெருவளூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். பட்டியல் சாட்சி சங்கீதா என்பவர் என் மனைவி. ஆஜர் எதிரிகள் அனைவரும் நெருங்கிய உறவினர்கள்.

2. கடந்த 2022 ம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் நான் என் வீட்டு அருகே இருக்கும்போது அடையாளம் தெரியத 3 நபர்கள் என்னை தாக்கினார்கள். அப்போது தடுக்க வந்த என் மனைவியும் திட்டி தாக்கிவிட்டு சென்றுவிட்டார்கள். யார் என்று எங்களுக்கு அடையாளம் தெரியவில்லை. எங்களுக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் வீட்டு மனை சம்மந்தமான முன்விரோதத்தில் அவர்கள் எங்களை தாக்கியிருக்ககூடும் என்று புகார் வாக்கமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(10.05.2022 தேதியிட்ட புகார்வாக்குமூலம் ஆ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

2. போலிசார் விசாரணையிலும், புகார்வாக்குமூலத்திலும் கடந்த 10.05.2022 ம் தேதியன்று மதியம் 3.30 மணி அளவில் ஆஜர் எதிரிகள் வீட்டு மனை சம்மந்தமாக என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, தடியாலும், கையாலும், தாக்கினார்கள் என்றும் தடுக்க வந்த என் மனைவியும் தகாத வார்த்தைகளால் திட்டி, ஜல்லி கல்லால் தாக்கினார்கள் என்று போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் அனைவரும் நெருங்கிய உறவினர்கள் என்பதனால் அவர்களுடன் சமாதானமாக சென்று அவர்களை காப்பாற்ற வேண்டி உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:**

**4.** என்னை ஆபாசமாக பேசி திட்டி, யார் அடித்தார்கள் என்று குறிபிட்டு சொல்லமுடியுமா என்றால் தெரியவில்லை. சந்தேகத்தின் பேரில் எதிரிகளுக்கு எதிராக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சந்தேகத்தின் பேரில் சொல்லிவிட்டேன்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.